**20.02.2020**

## பத்திரிக்கை செய்தி

## மெட்ரோ இரயில் நிலையங்களில் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல்வேறு இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து பின்வரும் கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது:

1. பிப்ரவரி 22, 2020 சனிக்கிழமை மாலை 05:30 மணி முதல் 07:30 மணி வரை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது
2. பிப்ரவரி 23, 2020 ஞாயிற்றுக்கிழமை மாலை 05:30 மணி முதல் 07:30 மணி வரை வடபழனி மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் இசை மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.